## வேலூர் கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை. டாக்டர்.ஜெ.நவநீதகிருஷ்ணன், பிவிஎஸ்ஸி.,

செ.மு.ந.க.எண். 65/அ1/2020 நாள். 10.11.2021

பொருள். பணியமைப்பு–தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு அடிப்படைப்பணி–கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது–பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்–தொடர்பாக

பார்வை.
1. இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை–35 செயலாணை ந.க.எண்.32321/R2/2020. நாள்.11.12.2020
2. இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை–35 கடிதம் ந.க.எண்.32321/R2/2020. நாள்.06.10.2021
3. உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, திருப்பத்தூர் கடிதம் ந.க.எண்.1091/ஆ/2014, நாள்.10.11.2021

*******

**ஆணை.**

பார்வை 1 ல் காணும் இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை–35 அவர்களின ஆணைப்படி கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வுக்கான பெயர் பட்டியல் 2019 ம் ஆண்டுக்கானது (15.03.2019 அன்றுள்ளபடி) அங்கீகரித்து ஆணையிடப்பட்டு அதன்படி திரு.சு.பிரபுகுமார், பதிவறை எழுத்தர், மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, திருவண்ணாமலை என்பவருக்கு வேலூர் மண்டலம், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர்அலுவலகத்திற்கு பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

திரு.சு.பிரபுகுமார், பதிவறை எழுத்தர் பதவி உயர்வில் திருப்பத்தூர் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் கடந்த 07.05.2021 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

.....2

பார்வை 3 ல் காணும் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் கடிதத்தில் கீழ்கண்டவாறு சான்று வழங்கியுள்ளார்.

1. திரு.சு.பிரபுகுமார், இளநிலை உதவியாளர் அவர் 07.05.2021 முற்பகல் முதல் நாளதுவரை ஊதியமில்லா விடுப்பு ஏதும் அனுபவிக்கவில்லையென்றும்
2. அவர் மீது குற்றச்சாட்டுகளோ, தீங்கு குறிப்புகளோ ஏதுமில்லையென்றும்
3. அவர் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதுமில்லையென்றும்
4. அவர் மீது தனிப்பட்ட முறையில் வழக்குகள் ஏதுமில்லையென்றும்

மேற்கண்டவாறு சான்று வழங்கியுள்ளார்.

மேற்படி கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் கீழ்கண்டவாறு அவரது பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திரு.சு.பிரபுகுமார், இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | : | 07.05.2021 முற்பகல் |
| பணிவரன் முறை செய்யப்படும் நாள் | : | 07.05.2021 முற்பகல் |

மேற்படி அவர் தகுதிகாண்பருவம் முடிக்க விதிமுறைகளின்படி 2 ஆண்டுகள் ஆகும்.

மேற்படி பணிவரன் முறை செய்யப்பட்ட விவரத்தினை அவரது பணிப்புத்தகத்தில் பதிந்து அதன் விவரத்தினை இவ்வலுவலகம் தெரிவிக்க கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10.11.2021

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர்-4.

பெறுநர்

உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, திருப்பத்தூர்

10/11/21

10/11/21

நகல். திரு.சு.பிரபுகுமார், இளநிலை உதவியாளர், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பத்தூர். (வழி முறையாக)

நகல். பணிப்புத்தகம்

நகல். இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை-35 அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.